செ.வெ.எண்.20 நாள்.10.01.2018.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், வடக்கு விஜயநாராயணம் கிராமத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 125 பயனாளிகளுக்கு ரூ.3.70 இலட்சம் மதிப்பில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

--------

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், வடக்கு விஜயநாராயணம் கிராமத்தில் மனுநீதி நாள் முகாம் இன்று (10.01.2018) நடைபெற்றது. இம்மனு நீதிநாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப, அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். தொடர்ந்து 125 பயனாளிகளுக்கு ரூ.3.70 இலட்சம் மதிப்பில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மனுநீதி நாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

மாவட்ட தலைநகரங்களிலிருந்து, தொலைதூர கிராம மக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் அக்கிராமத்திற்கு சென்று அரசின் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நடத்துவது தான் மனுநீதி நாள் முகாமாகும். அரசு அலுவலர்கள் அரசின் திட்டங்களை பெற தகுதிகள் என்ன என்பதையும், எவ்வாறு பெற வேண்டும் குறித்தும் தெரிவித்துள்ளவைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும். மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சித் தலைவர்கள் உள்ளிட்டோர்களும் மாதம் ஒரு கிராமத்தில் மனுநீதி நாள் முகாமினை நடத்தி வருகிறார்கள். ஏற்கனவே, மனுநீதி நாள் முகாமினையொட்டி, 98 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதில் 29 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விவசாயிகள் தங்களது நெற்பயிர்கள் மற்றும் மற்றப் பயிர்களுக்கு அவசியம் காப்பீடு செய்திட வேண்டும். விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதால் பெறும் இழப்புகளிலிருந்து தற்காத்து கொள்ள முடியும். திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டு வருகிறது. குறைந்த எண்ணிக்கையில் ஸ்மார்ட் கார்டுகள் வழங்க வேண்டியுள்ளது. ஸ்மார்ட் கார்டு திட்டத்தினால் வேறு நபர்களுக்கு பொருட்களை வழங்க இயலாது. பொருட்களை வாங்கினால் குறுஞ்செய்திகள் குடும்ப அட்டைதாரர்களின் கைபேசி எண்ணிற்கு உடனடியாக அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் ஸ்மார்ட் கார்டு பெறுவதற்கு தேவையான புகைப்படம், ஆதார் எண் போன்ற அலுவலர்கள் கேட்கும் தேவையான விவரங்களையும் வழங்க வேண்டும். பொதுமக்கள் தங்களது சுற்றுப்புறங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். சுத்தமாக வைத்தால் தான் டெங்கு கொசு உற்பத்தியாவதை தடுக்க முடியும். கொசு ஒழிப்பு தொடர்பாக அரசின் சார்பில் வீடுகளை பார்வையிட வருபவர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் இம்மாத இறுதிக்குள் அனைத்து இல்லங்களிலும் தனிநபர் கழிப்பறைகள் கட்டப்பட்டு, திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத மாவட்டமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனைவரும் சுகாதார முறையில் கழிப்பிடங்களை பயன்படுத்த வேண்டும்.

இளைஞர்களுக்கு பல்வேறு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களும், பல்வேறு தொழில் தொடங்கிட கடனுதவி திட்டங்களும் மாநில அரசு, மத்திய அரசு சார்பிலும் உள்ளது. இளைஞர்கள் மாவட்ட தொழில் மைய அலுவலகத்தினை அணுகி பயன்பெற வேண்டும். தமிழக அரசு கல்விக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி, சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இவைகளை பயன்படுத்தி உங்களது குழந்தைகளை சிறப்பாக படிக்க வைக்க வேண்டும். இங்கு பெறப்படும் மனுக்கள் மீது அலுவலர்கள் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென பேசினார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மனுநீதி நாள் முகாம் நடைபெறும் வளாகத்தில் மரக்கன்றுகளை நடவு செய்தார். பல்வேறு துறைகளின் மூலம் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

முகாமில், இலவச வீட்டுமனைப் பட்டா 56 நபர்களுக்கு ரூ.1.68 இலட்சம் மதிப்பிலும், தோட்டக்கலைத் துறையின் மூலம் 10 பயனாளிகளுக்கு காய்கறி விதைகளும், வேளாண்மைத் துறையின் மூலம் 2 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய சூரிய இனக்கவர்ச்சி பொறி கருவிகளையும், நூண்ணூற்று கலவை 5 நபர்களுக்கும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் மாற்றுத்திறனாளி உதவித் தொகை 29 நபர்களுக்கும், முதியோர் உதவித் தொகை 6 நபர்களுக்கும், விதவை உதவித் தொகை ஒரு நபருக்கும், மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் திருமண உதவித் தொகை 10 நபர்களுக்கும், இயற்கை மரண உதவித் தொகை 6 நபர்களுக்கு ரூ.1.96 இலட்சம் மதிப்பிலும் என மொத்தம் 125 நபர்களுக்கு ரூ.3.70 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, வடக்கு விஜயநாராயணம் கிராமத்தில் இயந்திர நெல் நடவினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார். அங்கு விவசாயிக்கு நெல் பயிரில் வரப்பினையொட்டி சாகுபடி செய்யும் வகையில் சூரியகாந்தி விதைகளை வழங்கினார். தொடர்ந்து, பரப்பாடி அரசு மேல்நிலைப்பள்ளியில் இயற்கை வேளாண்மை குறித்து மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செயல்படுத்தி கிச்சன் கார்டன் திட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த காய்கறி செடிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து பள்ளி மாணவ, மாணவிகளிடம் டெங்கு ஒழிப்பு, சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.

இம்முகாமில், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரலிங்கம், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.பெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.நிர்மலா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட இயக்குநர் திருமதி.ஜெய சூர்யா, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாணசுந்தரம், நாங்குநேரி வட்டாட்சியர் திரு.ஆதிநாராயணன், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் திரு.குருசந்திரன் உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.